செ.வெ.எண்: 20 நாள்: 06.02.2017

# விராலிமலை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 196 மாணவர்களுக்கு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி தெரிவித்ததாவது:

தமிழகஅரசு பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாடப்புத்தகம், சீருடை, காலணி, நோட், புத்தகங்கள், மதிவண்டி உட்பட 14க்கும் மேற்பட்ட நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. அதனடிப்படையில் விராலிமலை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு பயிலும் 196 மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதுபோன்ற நலத்திட்டங்களை மாணவ, மாணவியர்கள் பெற்று சிறப்பாக கல்வி பயின்று தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இரத்தினசபாபதி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.அன்பழகன், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ஆர்.ராமசாமி, விராலிமலை வட்டாட்சியர் திரு.சதீஷ், விராலிமலை முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, ஆத்மா தலைவர் திரு.பழனியாண்டி, முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திருமூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**